<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 283/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரவணகுமார் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 24.04.2023.

<u>**( முதல் விசாரணை ):**</u>

1. நான் தற்போது உடுமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . கடந்த 21.04.2022 ம் தேதி உடுமலை மாரியம்மன் கோயில் தேர் திருவிழா பாதுகாப்பு பணியில் நான் தலைமைக்காவலர் திரு. சேகர், முதல் நிலைக்காவலர் கோவிந்த ராஜ், பத்ரா ஆகியோர் பணியில் இருந்தபோது பப்பிஸ் மற்றும் நவீன் ஆகியோர் தேர் பவனி வரும்போது அதற்கு இடையூறாகவும் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கம் இடையூறு ஏற்படும் வண்ணம் நடந்து கொண்டதால் மேற்படி தேர் திருவிழாவின்போது தேர் நிலைக்கு வருவதற்கு இடையூறு ஏற்படுத்தி ரகளை ஏற்படுத்தியதால் மேற்படி நபர்கள் மீது நடைவடிக்கை எடுக்குமாறு கூறி பாதுகாப்பு அலுவல் முடித்து 22.04.2022 அன்று அதிகாலை 2.15 மணிக்கு தணி அறிக்கை ஒன்று உடுமலை கவால் நிலையத்தில் அளித்தேன்.

2. மேற்படி என்னிடம் காட்டப்படும் தணி அறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த தணி அறிக்கை அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை

விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. தேர் எப்போது கிளம்பி எப்போது நிலைக்கு வந்தது என்றால் மாலை 4.15 மணிக்கு புறப்பட்டு இரவு 9.50 க்கு நிலைக்கு வந்தது. பொதுவாக தேர் திருவிழா, போராட்டம், அரசியல் கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் போலிசார் தரப்பில் பொதுவாக வீடியோ பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். ஆனால் மேற்படி தேர்திருவிழா அன்று வீடியோ எடுக்கவில்லை. மேற்படி உடுமலை தேர் திருவிழாவின்போதும் வீடியோ எடுக்கப்பட்டு இருந்ததை தாக்கல் செய்தால் மேற்படி வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்பதாலும் நான் சொன்ன படி எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்பதாலும் தான் எடுக்கப்பட்ட வீடியோ பதிவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தேர்வடம் பிடிப்பதற்கு முன்பு உடுமலையை சேர்ந்த முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் அனைத்து சமூதாய தலைவர்களுக்கும் இந்து அமைப்புகளை சேர்ந்த மாவட்ட மாநில தலைவர்களுக்கு பரிவட்டம் கட்டுவது வழக்கம் என்றால் சரிதான்.

2. எப்போதும் உடுமலை தேர் திருவிழாவின் போது இந்து முன்னனி அமைப்பை சேர்ந்தவர்கள் சீர்வரிசையுடன் வந்து அம்மனுக்கு மாலை அணிவிப்பது வழக்கம் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் குறிப்பிட்டு வாகன ஓட்டி யாரேனும் பொதுமக்கள் யாரேனும் புகார் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் கொடுத்த தணியறிக்கையில் எந்த இரு சக்கர வாகனங்களுக்கு இடையூறு ஏற்பட்டது என்பதை காட்ட வாகனத்தின் பதிவு எண்ணையோ பொதுமக்களில் யா ருக்கு மேற்படி எதிரி இடையூறு ஏற்படுத்தினார் என்பதை காட்ட அவர்கள் பெயர் முகவரியையோ தணியறிக்கையில் நான் குறிப்பிடவில்லை என்றால் அதிகமான போக்குவரத்தும் பெரும் கூட்டம் இருந்ததால் குறிப்பிடவில்லை நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தேர் பவனி வந்து நிலைக்கு வரும்வரை அந்த வீதியில் போக்குவரத்து இருக்காது என்றால் சரிதான்.

3. இந்து முன்னனி மாநில தலைவர்களும் மற்றும் மாவட்ட தலைவரும் ஒரு சில பகுதிகளில் தேர் உடன் செல்ல வேண்டாம் என்று காவல் துறை உயர் அதிகாரிகள் தடுத்தது குறித்து இந்து முன்னனி நிர்வாகிகள் கேள்விகேட்தற்கு இறந்துபோன 1ம் எதிரியான பப்பிஸ் மற்றும் ஆஜர் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி இந்து முன்னிலையில் உறுப்பினராக உள்ளதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் புள்ளி விவர கணக்கிற்காக 2ம் எதிரி மீது பொய்யாக இந்த புகார் கொடுத்துள்ளேன்

என்றால் சரியல்ல. நான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.